# களம் தேர்வு – 02

1. கலைச்சொல் அறிக "Elocution"

A) துணிவு B) முழக்கம் C) பேச்சாற்றல் D) ஒழுக்கம்

2. பொருத்துக.

| | | | | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|---|---|---|
| a) கற்கும் முறை | - 1) செயல் | | A) | 3 | 4 | 5 | 1 | 2 |
| b) உயிர்க்குக் கண்கள் | - 2) காகம் | | B) | 2 | 3 | 5 | 1 | 4 |
| c) விழுச்செல்வம் | - 3) பிழையில்லாமல் கற்றல் | | C) | 4 | 5 | 3 | 1 | 2 |
| d) எண்ணித் துணிக | - 4) எண்ணும் எழுத்தும் | | D) | 3 | 1 | 5 | 4 | 2 |
| e) கரவா கரைந்துண்ணும் | - 5) கல்வி | | | | | | | |

3. --------- தீமை உண்டாகும்

A) செய்யத்தகுந்த செயல்களைச் செய்வதால்

B) செய்யத்தகாத செயல்களைச் செய்யாமல் இருப்பதால்

C) செய்யத்தகுந்த செயல்களைச் செய்யாமல் இருப்பதால்

D) எதுவும் செய்யாமல் இருப்பதால்

4. "இடர் ஆழி" என்பதன் பொருள் ---------

A) உலகம் B) துன்பக்கடல் C) பெரும்பரப்பு D) ஒளிவிடும் சக்கரம்

5. திருக்குறள் எத்தனை மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது?

A) 108 B) 107 C) 106 D) 105

6. கூற்று 1: தமிழ் பிறமொழித் துணையின்றித் தனித்து இயங்குவது மட்டுமன்றித் தழைத்தோங்கவும் செய்யும் - கால்டுவெல்

கூற்று 2: தமிழ்மொழி அழகான சித்திர வேலைப்பாடமைந்த வெள்ளித்தட்டு; திருக்குறள் அதில் வைக்கப்பட்டுள்ள தங்க ஆப்பில்; தமிழ் என்னை ஈர்த்தது; குறளோ என்னை இழுத்தது - கிரௌல்

கூற்று 3: தமிழ்மொழி வல்லோசை கொண்ட மொழி

A) கூற்று 1 சரி / கூற்று 2, 3 தவறு B) கூற்று 1, 2 சரி / கூற்று 3 தவறு

C) கூற்று 1, 3 சரி / கூற்று 2 தவறு D) கூற்று 2, 3 சரி / கூற்று 1 தவறு

7. முதுமொழிக்காஞ்சியின் அடிப்படையில் பகைவரை தண்டிப்பதை விட சிறந்தது எது?

A) தன்னை மேம்படுத்திக்கொளல் B) பகைவரைப் பொறுத்துக்கொளல்

C) பகைவருடன் நட்புக் கொளல் D) பகைவரைப் பாராட்டுதல்

8. பொருத்துக

a) மதிரை - 1) கோயம்புத்தூர்

b) கோவன்புத்தூர் - 2) செங்கை

c) ஆற்றூர் - 3) மதுரை

d) செங்கல்பட்டு - 4) ஆத்தூர்

(A) 2 4 1 3 (B) 4 3 2 1 (C) 2 1 3 4 (D) 3 1 4 2

9. 'வேன்மிகு' – பிரித்தெழுதுக

A) வேள் + மிகு B) வேன் + மிகு C) வேன்மை + மிகு D) வேல் + மிகு

10. 'கண்ணஞ்சப்படுதல்' என்பதன் சொற்பொருள் காண்க

A) போற்றும்படி நடத்தல் B) இரக்கப்படுதல் C) பொறாமைபடுதல் D) நாணுதல்

11. பொருத்துக

a) மேதையில் சிறந்தன்று - 1) வாய்மையுடைமை

b) வண்மையில் சிறந்தன்று - 2) பின்சிறுகாமை

c) இளமையில் சிறந்தன்று - 3) கற்றாரை வழிபடுதல்

d) கற்றலின் சிறந்தன்று - 4) கற்றது மறவாமை

e) முன்பெருகலின் சிறந்தன்று - 5) மெய்பிணி இன்மை

(A) 3 1 4 5 2 (B) 2 5 1 4 3 (C) 4 1 5 3 2 (D) 4 1 2 5 3

12. 'உரம்' – என்பதன் பொருளில் பொருந்தாதது எது?

A) தின்மை B) வலிமை C) மார்பு D) திண்மை

13. அறவுரைக்கோவை என்ற நூலின் ஆசிரியர் யார்?

A) பெருஞ்சித்திரனார் B) மோசிகீரனார் C) கூடலூர்கிழார் D) மீனாட்சி சுந்தரனார்

14. கூற்று 1: அகர ஈற்று பெயரெச்சத்தை அடுத்து வல்லினம் மிகும்

கூற்று 2: இகர ஈற்று வினையெச்சத்தை அடுத்தும் வல்லினம் மிகும்

A) கூற்று 1, 2 சரி B) கூற்று 1 சரி / 2 தவறு C) கூற்று 1, 2 தவறு D) கூற்று 1 தவறு /2 சரி

15. சந்திப்பிழையுற்ற தொடரைத் தேர்க

A) ஆசிரியர் வீட்டுப்பாடம் செய்ய சொன்னார்

B) வழியெங்கும் பூக்கள் கொட்டிக் கிடக்கிறது

C) உ.வே.சா ஓலைச் சுவடிகளைத் தேடித் திரிந்தார்

D) இனியன் தானியத்தை அள்ளிக் கொடுத்தான்

16. எறும்பும் தன் கையால் எண்சாண் – இப்பாடலடி இடம்பெற்ற நூல்

A) கொன்றை வேந்தன் B) ஆத்திசூடி C) தனிப்பாடல் திரட்டு D) நல்வழி

17. பிழையற்றதைத் தேர்க

A) காய்ந்த கட்டை B) பாட செய்தான் C) பாடாதக் குயில் D) கேளா செவி

18. சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும் – இந்த உவமைத் தொடர் உணர்த்தும் சரியான பொருளைத் தேர்ந்தெடு

A) சித்திரம் வரைய சுவர் அவசியம்

B) சுவர் இல்லையென்றால் சித்திரம் இல்லை

C) உடல்நலம் நன்றாக இல்லையென்றால் உழைக்க முடியாது

D) உடல்நலம் நன்றாக இருந்தால் தான் உழைக்க முடியும்

19. அறவுணர்வு உடையாரிடத்து உள்ள பண்புகளில் தவறானதைத் தேர்க

A) வறியவர்க்குப் பொருள் அளித்தல் B) இவ்வுலகத்தின் நிலையாமையை உணர்தல்

C) உடல்வாடினாலும் ஒழுக்கத்தில் குன்றாதிருத்தல் D) எவ்வுயிரையும் துன்புறுத்தாமல் வாழ்தல்

20. செரு அடுதோள் நல்லாதன் என்று பாயிரத்தால் சிறப்பிக்கப்படுபவர் இயற்றிய நூல் எது?

A) முதுமொழிக்காஞ்சி B) சிறுபஞ்சமூலம் C) திரிகடுகம் D) ஏலாதி

21. புதரில் விதைத்த விதை போன்றது எது?

A) நெஞ்சில் நிறையிலான் கொண்ட தவம்

B) என்பெறினும் பால்பற்றிச் சொல்லா விடுதலும்

C) உண்பொழுது நீராடி உண்டலும்

D) இல்லார்க்கொன்றீயும் உடைமையும்

22. ‘இயன்மை’ – என்பதன் பொருள்

A) நுட்பமான B) செயற்கையற்ற C) இயன்ற அளவு D) வறுமை

23. ------ இல்லை என்றால் காரியம் இல்லை

கோடிட்ட இடத்தில் சரியான சொல்லைப் பொருத்துக

A) கடவுள் B) கல்வி C) மழை D) சூரியன்

24. முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா – இத்தொடரில் உணர்த்தும் இலக்கண பொருண்மையுள் சரியானது எது?

A) உயர்திணை ஒருமை B) அஃறிணை பன்மை

C) உயர்திணை பன்மை D) அஃறிணை ஒருமை

25. புறா – இது எவ்வகை பெயர்?

A) காரணப் பொதுப்பெயர் B) காரணச்சிறப்புப் பெயர்

C) இடுகுறிப் பொதுப்பெயர் D) இடுகுறிச் சிறப்புப் பெயர்

26. ‘தொப்புள்’ என்பதன் தூய தமிழ்ச்சொல்

A) கொப்பூழ் B) கொம்பூழ் C) கொப்புள் D) கொம்புள்

27. கண்ணதாசனின் புனைப்பெயர்களில் தவறானது எது?

A) கமகப்பிரியா B) வணங்காமுடி C) பார்வதிபுலவர் D) ஆரோக்கியநாதன்

28. கண்ணதாசன் தொடர்பான கூற்றுகளை ஆராய்க

1. ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்ட திரையிசைப்பாடல்களை இயற்றியுள்ளார்.

2. சிறுகூடல்பட்டியில் 1927 ல் பிறந்த இவர் 1981ல் இயற்கை எய்தினார்.

3. தமிழக அரசின் முதல் அரசவைக் கவிஞராக திகழ்ந்தார்

4. இயற்பெயர் - முத்தையா, புனைப் பெயர் - கமகப்பிரியா

A) 1, 3 சரி / 2, 4 தவறு B) 2, 4 சரி / 1, 3 தவறு

C) 1, 4 சரி / 2, 3 தவறு D) 3, 4 சரி / 1, 2 தவறு

29. பொருந்தாதது எது?

A) குற்றங்குறை B) ஓங்கியுயர்ந்த C) தங்குதடையின்றி D) உயர்வுதாழ்வின்றி

30. 'எடுத்து வந்தான்' - என்பதன் காலம்

A) இறந்த காலம் B) நிகழ்காலம் C) எதிர்காலம் D) காலம் காட்டாது

31. காய்களின் இளமை மரபு 'பிஞ்சு' வகையில் பொருந்தாதது எது?

A) கத்தரி B) வாழை C) வெள்ளரி D) அவரை

32. 'மான்' என்பதன் இளமை மரபு காண்க

A) கன்று B) குட்டி C) குருளை D) பறழ்

33. பொருந்தாத இணைகளைக் காண்க

1. கூகை -அகவும் 2. சிங்கம் - முழங்கும் 3. குதிரை - கரையும்

4. மலர் - பறி 5. களை - எடு

A) 1 இணை B) 2 இணை C) 3 இணை D) 4 இணை

34. பொருத்துக

| | | |
|---|---|---|
| a) பஞ்சம் | - | 1) நலம் |
| b) சூரியன் | - | 2) அவா |
| c) சேமம் | - | 3) வறட்சி |
| d) சொத்து | - | 4) கதிரவன் |
| e) ஆசை | - | 5) உடைமை |

(A) 3 2 5 1 4 (B) 2 4 3 5 1 (C) 3 4 1 5 2 (D) 3 4 2 1 5

35. கேட்காத கடனும் பார்க்காத பயிறும் வீடுவந்து சேராது - இத்தொடரில் உள்ள பெயரெச்சங்களை காண்க.

A) கேட்காத, வந்து B) பார்க்காத, கேட்காத C) பார்க்காத, வந்து D) கடன், பயிர்

36. கடுகி - என்பதன் சரியான சொற்பொருள்

A) சுருங்கி B) உருகி C) விரைந்து D) கோபம்

37. கீழ்க்கண்டவற்றை ஆராய்க

1. தந்தையோடு மகள் வந்தாள் - மூன்றாம் வேற்றுமை

2. வீட்டின் கண் குழந்தை விளையாடுகிறது - ஏழாம் வேற்றுமை

A) 1, 2 சரி B) 1 சரி 2 தவறு C) 1, 2 தவறு D) 1 தவறு 2 சரி

38. பொருந்தாத இணையைக் காண்க. (பிறமொழிச்சொல் – தமிழ்ச்சொல்)

A) உஷார் – விழிப்பு B) இருதயம் – நெஞ்சகம் C) இம்சை – துன்பம் D) சூரியன் – ஆதவன்

39. 'கிரீடம்' என்பதன் தமிழ்ச்சொல் காண்க

A) மகுடம் B) தலையணி C) மணிமுடி D) எதுவுமில்லை

40. பிறமொழிச்சொல் அற்ற வாக்கியத்தை தேர்ந்தெடு

A) கொடுங்கோல் அரசன் அக்ரமம் செய்தான் B) குழந்தைகளுக்கு கண் திருஷ்டி சுற்றிப்போடு

C) புஷ்பமின்றி அபிஷேகம் உண்டா D) இந்த வேலையில் சேர என்ன தகுதி உள்ளது

41. பொருத்துக.

A) பந்தர் - 1) முதற்போலி

B) மைஞ்சு - 2) முற்றுப் போலி

C) அஞ்சு - 3) இடைப் போலி

D) அரையர் - 4) கடைப்போலி

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 1 | 3 | 4 |
| B) | 3 | 4 | 2 | 1 |
| C) | 2 | 4 | 3 | 1 |
| D) | 4 | 1 | 2 | 3 |

42. அஃறிணைப் பெயர்களின் இறுதியில் நிற்கும் மகர எழுத்திற்குப் பதிலாக னகரமும் மற்றும் லகர எழுத்திற்குப் பதிலாக ரகரமும் வருவது -------- போலியாகும்.

A) முதல் B) முற்று C) கடை D) இடை

43. கூற்றுகளை ஆராய்க

1. நாகரிகம் கருதி மறைமுகமாகக் குறிப்பிடுதல் குழூஉக்குறி ஆகும்

2. மங்கலமற்ற சொற்களை மாற்றி மங்கலச் சொற்களால் குறிப்பிடுதல் மங்கலம் எனப்படும்

3. பிறர் அறியாமல் ஒரு குழுவுக்கு மட்டும் புரியும் வகையில் குறிப்பிடுதல் போலி ஆகும்

A) 1, 2 சரி B) 2, 3 சரி C) 1, 3 சரி D) 2 மட்டும் சரி

44. பொருந்தாத ஒன்றைத் தேர்க

A) திருமுகம் B) வெள்ளாடு C) விளக்கைக் குளிரவை D) ஓலை

45. முன் பின்னாகத் தொக்கப் போலி என குறிப்பிடப்படுவது எது?

A) மரூஉ B) முற்றுப்போலி C) இலக்கணப்போலி D) இலக்கணமுடையது

46. சரியான வரிசையைத் தேர்க

அ) சேர்த்தபொருளைப் பாதுகாத்தல் ஆ) பொருளைப் பிரித்து செலவு செய்தல்

இ) பொருள்களைச் சேர்த்தல் ஈ) பொருள் வரும் வழிகளை அறிதல்

A) இ ஆ ஈ அ B) இ ஈ அ ஆ C) ஈ இ அ ஆ D) ஈ அ ஆ இ

47. "அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக்
குறுகத் தரித்த குறள்" என்று திருக்குறளின் பெருமையை போற்றியவர் யார்?

A) ஔவையார் B) கபிலர் C) இடைக்காடனார் D) கல்லாடனார்

48. நெடில் எழுத்துக்களைக் குறிக்க பயன்படும் எழுத்துச் சாரியைக்கான உதாரணத்தைத் தேர்க

A) ககரம், மகரம் B) ஐகாரம், ஏகாரம் C) அஃகேனம் D) ஐகான், ஔகான்

49. சரியான கூற்றுகளை ஆராய்க

1. பால் ஐந்து வகைப்படும். அவை ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகியனவாகும்.

2. போலி முதற்போலி, இடைப்போலி, கடைப்போலி, முற்றுப்போலி என நான்கு வகைப்படும்

3. இலக்கண நெறியிலிருந்து பிறழ்ந்து, சிதைந்து வழங்கும் சொற்கள் மரூஉ எனப்படும்

A) 1 மட்டும் B) 2 மட்டும் C) 1, 2 மட்டும் D) 1, 3 மட்டும்

50. ஔவையார், வௌவால் எனச் சொற்களின் முதலில் வரும் போது ஔகாரக் குறுக்கம் பெறும் மாத்திரையின் அளவு என்ன?

A) இரண்டு B) ஒன்றரை C) ஒன்று D) அரை

51. பொருத்துக.

A) பந்து, அம்பு, கன்று - 1) இடைத்தொடர்க் குற்றியலுகரம்
B) கயறு, அரசு, ஒன்பது - 2) மென்தொடர்க் குற்றியலுகரம்
C) உப்பு, பற்று, பேச்சு - 3) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்
D) மார்பு, மூழ்கு, சால்பு - 4) வன்தொடர்க் குற்றியலுகரம்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 1 |
| B) | 3 | 4 | 2 | 1 |
| C) | 2 | 1 | 4 | 3 |
| D) | 4 | 1 | 2 | 3 |

52. "தெளிவுறுத்தும் படங்களோடு சுவடிஎலாம் செய்து செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்" என்று பாடியவர்?

A) பாவேந்தர் B) தேசியக்கவி C) உவமைக் கவிஞர் D) நாமக்கல் கவிஞர்

53. பொருத்துக.

a) சிற்பம் - 1) Aesthetics
b) கல்வெட்டு - 2) Anchor
c) அழகியல் - 3) Sculpture
d) நங்கூரம் - 4) Inscriptions

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 4 | 2 | 1 |
| B) | 4 | 3 | 1 | 2 |
| C) | 4 | 3 | 2 | 1 |
| D) | 3 | 4 | 1 | 2 |

54. முதனிலை திரிந்த தொழிற்பெயருக்கான உதாரணத்தைத் தேர்க

A) இடி, கொதி B) மறதி, கல்வி C) கோள், உடன்பாடு D) அடி, புகழ்

55. நன்னூலின் படி தமிழிலுள்ள ஓரெழுத்து ஒரு மொழிகளின் எண்ணிக்கை

A) 40 B) 42 C) 44 D) 46

56. பெயர்ப்பகுபதம் எத்தனை வகைப்படும்?

A) நான்கு B) மூன்று C) ஆறு D) ஐந்து

57. பொருத்துக.

a) நே - 1) கவர்
b) நை - 2) அன்பு
c) வௌ - 3) இளமை
d) பை - 4) வறுமை
e) நோ - 5) இழிவு

| | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|
| A) | 2 | 5 | 1 | 3 | 4 |
| B) | 5 | 3 | 1 | 4 | 2 |
| C) | 3 | 2 | 1 | 4 | 5 |
| D) | 5 | 4 | 3 | 2 | 1 |

58. பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் அமைந்து காலம் அல்லது எதிர்மறையைக் காட்டுவது

A) இடைநிலை B) சந்தி C) விகாரம் D) சாரியை

59. சொல்லையும் பொருளையும் பொருத்துக.

| | | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|---|
| a) விச்சை | - | 1) செல்வம் | | A) | 2 | 4 | 3 | 1 |
| b) எச்சம் | - | 2) கல்வி | | B) | 3 | 4 | 2 | 1 |
| c) கழனி | - | 3) கொடுத்தல் | | C) | 2 | 1 | 4 | 3 |
| d) ஈதல் | - | 4) வயல் | | D) | 4 | 2 | 3 | 1 |

60. பாரதிதாசனின் எந்த நூலுக்கு சாகித்திய அகாடமி விருது அளிக்கப்பட்டுள்ளது?

A) கண்ணகி புரட்சிக் காப்பியம் B) சேரதாண்டவம்

C) பிசிராந்தையார் D) வணக்கம் வள்ளுவ

61. சரியான இணைப்புச் சொல்லால் நிரப்புக

1. குயிலுக்குக் கூடுகட்டத் தெரியாது. --------- காக்கையின் கூட்டில் முட்டையிடும்

2. தமிழகத்தில் மழை பெய்து வருகிறது. --------- இரண்டு நாள் மழை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு

A) ஆகையால், அதுபோல B) ஏனெனில், மேலும்

C) அதனால், மேலும் D) அதுபோல, எனவே

62. "மழை சடசடவெனப் பெய்தது" இத்தொடரில் அமைந்துள்ளது?

A) அடுக்குத்தொடர் B) இரட்டைக்கிளவி C) தொழிலாகு பெயர் D) பண்பாகுபெயர்

63. பொருளின் பெயர் அதன் உறுப்புக்கு ஆகி வருவது ------

A) பொருளாகு பெயர் B) சினையாகு பெயர் C) பண்பாகு பெயர் D) இடவாகு பெயர்

64. சரியான வினாச்சொல்லை இட்டு நிரப்புக

அறநெறிச்சாரம் என்பதன் பொருள் -------?

A) என்ன B) யாது C) யாவை D) எது

65. பொருத்துக.

| | | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|---|
| a) விளைநிலம் | - | 1) இன்சொல் | | A) | 4 | 1 | 2 | 3 |
| b) விதை | - | 2) வன்சொல் | | B) | 1 | 4 | 2 | 3 |
| c) களை | - | 3) உண்மை | | C) | 3 | 2 | 1 | 4 |
| d) உரம் | - | 4) ஈகை | | D) | 1 | 2 | 3 | 4 |

66. இன்பு + உருகு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ---------

A) இன்புஉருகு B) இன்பும்உருகு C) இன்புருகு D) இன்பருகு

67. கலைச்சொல் அறிக "உழவியல்"

A) Irrigation B) Cultivation C) Agronomy D) Agriculture

68. உவமைக்கான சரியானப் பொருளைத் தேர்க "ஆற்றில் கரைத்த புளி போல"

A) மிக அரிதாக B) பயனற்ற செயல் C) போலி D) உயிர் நாடியற்றது

69. தமது வீட்டில் 'வட்டத் தொட்டி' என்னும் பெயரில் இலக்கியக் கூட்டங்களில் நடத்தி வந்தவர் யார்?

A) வீ.முனுசாமி B) டி.கே.சிதம்பரனார் C) இராசகோபாலன் D) குன்றக்குடி அடிகளார்

70. கூற்றுகளை ஆராய்க

1. பழமொழி நானூறு நூலின் ஆசிரியர் முன்றுரை அரையனார் ஆவார்

2. இவர் கி.பி. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்பர்

3. இவர் சைவ சமயத்தைச் சேர்ந்தவர்

4. பழமொழி நானூறு 100 பாடல்களைக் கொண்டது

A) அனைத்தும் சரி B) 1, 3, 4 சரி C) 2, 3, 4 சரி D) 1, 2 சரி

71. "புகாவாக" என்னும் சொல்லின் பொருள்

A) மழை B) இளமகள் C) உணவாக D) திண்ணை

72. 'தந்துதவும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

A) தந்து+உதவும் B) தா+உதவும் C) தந்து+தவும் D) தந்த+உதவும்

73. பொருத்துக.

| | | | | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|---|---|---|
| a) நெறி | - 1) இணை | A) | | 3 | 4 | 5 | 2 | 1 |
| b) ஒப்புமை | - 2) விடமுள்ள பாம்பு | B) | | 2 | 4 | 5 | 1 | 3 |
| c) நச்சரவம் | - 3) வழி | C) | | 3 | 1 | 2 | 5 | 4 |
| d) வியல் | - 4) எங்கு | D) | | 2 | 5 | 3 | 4 | 1 |
| e) யாண்டு | - 5) காடு | | | | | | | |

74. பொருந்தாத ஒன்றைத் தேர்க

A) புறநகர் B) சோணாடு C) கடைக்கண் D) கால்வாய்

75. சரியான அகர வரிசையமைந்த அமைப்பை தேர்க

(A) இட்லி, இஃது, சடை, சட்டை, தமர், தன்மை, வடிவம், வட்டம்

(B) இஃது, இட்லி, சட்டை, சடை, தன்மை, தமர், வட்டம், வடிவம்

(C) இஃது, இட்லி, சட்டை, சடை, தமர், தன்மை, வட்டம், வடிவம்

(D) இட்லி, இஃது, சட்டை, சடை, தன்மை, தமர், வட்டம், வடிவம்

76. தொடர் வகை காண்க - இளமையில் கல்

(A) செய்தித்தொடர் (B) வினாத்தொடர் (C) கட்டளைத்தொடர் (D) உணர்ச்சித் தொடர்

77. தவறான தொடர் வகை எது?

(A) வீட்டைத் தூய்மையாக வைத்திரு - கட்டளைத் தொடர்

(B) காந்தியடிகள் தீண்டாமையை எதிர்த்து போராடினார் - செய்தித்தொடர்

(C) உழைத்தால் ஊதியம் உண்டு - உடன்பாட்டுத்தொடர்

(D) கபிலன் வீட்டிற்கு வந்திலன் - உணர்ச்சித் தொடர்

78. ஒரு எழுவாய் பல பயனிலைகளைக் கொண்டு முடியும் பொழுது ஒவ்வொரு பயனிலைக்கும் இறுதியில் வரும் நிறுத்தற் குறியீடு எது?

(A) காற்புள்ளி (B) அரைப்புள்ளி (C) முக்காற்புள்ளி (D) முற்றுப்புள்ளி

79. பொருத்துக.

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a) இயற்சொல் - | 1) கடல் | A) | | 2 | 4 | 3 | 1 |
| b) திரிசொல் - | 2) சக்கரம் | B) | | 1 | 3 | 4 | 2 |
| c) திசைச்சொல் - | 3) அழுவம் | C) | | 3 | 1 | 4 | 2 |
| d) வடசொல் - | 4) இரயில் | D) | | 2 | 3 | 4 | 1 |

80. சரியான விடையைத் தேர்க

1. ஒரு தொடரை வினை, வினா, பெயர் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றைக் கொண்டு முடித்து வைப்பது

2. ஒரு தொடரில் யார்? எது? எவை? என்னும் வினாக்களுக்கு விடையாக அமைவது ---------

A) எழுவாய், பயனிலை B) பயனிலை, செயப்படுபொருள்

C) பயனிலை, எழுவாய் D) எழுவாய், செயப்படுபொருள்

81. சரியான இணை

1. Eternal – நிலையான 2. Egalitarian – மடாலயம்

3. Deplete – பயன்பாட்டில் குறைதல் 4. Tertiary – எல்லை

A) 2, 3 சரி B) 1, 3 சரி C) 1, 3, 4 சரி D) 1, 4 சரி

82. Settlement - என்ற ஆங்கில சொல்லிற்கு இணையான தமிழ் சொல்

A) தீர்வு B) தீர்ப்பு C) குடியிருப்புகள் D) அடைதல்

83. Sovereign - என்ற ஆங்கில சொல்லிற்கு இணையான தமிழ் சொல்

A) இறையாண்மை B) சமத்துவம் C) கால்வாய் D) சேமிப்பு கிடங்கு

84. பொருத்துக

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| a) Diety | -1) ஆசான் | (A) | 2 | 3 | 4 | 1 |
| b) Preceptor | -2) ஆய்வுக் கட்டுரை | (B) | 3 | 1 | 2 | 4 |
| c) Corpse | -3) தெய்வம் | (C) | 3 | 1 | 4 | 2 |
| d) Treatise | -4) சடலம் | (D) | 2 | 4 | 3 | 1 |

85. பசுங்கணிகம் - என்ற தமிழ் சொல்லிற்கு இணையான ஆங்கிலச் சொல்

A) Chlorophyll B) Chloroplast C) Greencel D) Chloropoly

86. வாக்கியம் 1: HDMI – என்பதன் தமிழ் விரிவாக்கம் குறைதிறன் பல்லூடக இடை முகப்பு

வாக்கியம் 2: USB – என்பதன் தமிழ் விரிவாக்கம் பொதுவரிசை இணைப்பு

A) வாக்கியம் 1 மட்டும் சரி B) வாக்கியம் 2 மட்டும் சரி

C) வாக்கியம் இரண்டும் சரி D) வாக்கியம் இரண்டும் தவறு

87. பொருத்துக

| | | | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|---|---|
| a) Mesosphere | -1) அயனி மண்டலம் | (A) | 2 | 3 | 1 | 5 | 4 |
| b) Ionosphere | -2) அடிவளி மண்டலம் | (B) | 2 | 3 | 5 | 4 | 1 |
| c) Exosphere | -3) அடுக்குவளி மண்டலம் | (C) | 5 | 1 | 3 | 4 | 2 |
| d) Troposphere | -4) புறவளி மண்டலம் | (D) | 5 | 1 | 4 | 2 | 3 |
| e) Stratosphere | -5) இடைவளி மண்டலம் | | | | | | |

88. வரைப்பட்டிகை - என்ற தமிழ் சொல்லிற்கு இணையான ஆங்கிலச் சொல்

A) Laptop B) Desktop C) Vaporization D) Tablet

89. தவறான இணை எது?

A) Solute - கரைப்பான்
B) Flame - சுடர்
C) Respiration - சுவாசம்
D) Sublimation - பதங்கமாதல்

90. வெண்கணிகம் – என்ற தமிழ் சொல்லிற்கு இணையான தமிழ் சொல்

A) White cell B) Tramposite C) Leucoplast D) Insultors

91. பொருத்துக

a) அளைஇ -1) விருப்பம்
b) உப்பக்கம் -2) கலந்து
c) படிறு -3) முதுகு பக்கம்
d) அமர் -4) வஞ்சம்

(A) 2 4 1 3 (B) 2 3 1 4 (C) 2 3 4 1 (D) 2 1 4 3

92. சரியான இணை எது?

A) நண்பு -நம்பிக்கை B) மரம் – வீரம் C) என்பு – எலும்பு D) பன் – இசை

93. வாக்கியம் 1 : வன்மை என்பது கொடையை குறிக்கும்

வாக்கியம் 2 : வண்மை என்பது கொடுமையை குறிக்கும்

A) வாக்கியம் 1 சரி B) வாக்கியம் 2 சரி C) இரண்டும் சரி D) இரண்டும் தவறு

94. புழு – என்பது எதை குறிக்கும்

A) அன்பால் B) என்பு C) என்பிலாது D) எதுவுமில்லை

95. தவறானதை தேர்ந்தெடு

A) ஈரம் – இறக்கம் B) அளைஇ – கலந்து C) கடம் – உடம்பு D) அமர் – விருப்பம்

96. வாக்கியம் 1 : மிசை – என்பதன் எதிர்ச்சொல் "பள்ளம்"

வாக்கியம் 2 : அவள் – என்பதன் எதிர்ச்சொல் "பள்ளம்"

A) வாக்கியம் 1 சரி B) வாக்கியம் 2 சரி C) இரண்டும் சரி D) இரண்டும் தவறு

97. தவறானதை தேர்ந்தெடு

A) நாடி – விரும்பி
B) எவன்கொலோ – எவனோ
C) பதுமத்தான் – தாமரையில் உள்ள பிரமன்
D) இன்சொலன் – இனிய சொற்கள் பேசுபவன்

98. ஆறு – என்ற சொல்லிற்கு பொருந்தாதது எது?

A) வழி B) தணி C) என் D) ஓடும் பரப்பு

99. தானியங்களை அளக்கும் படிக்கு என்ன பெயர்?

A) மானம் B) மாணம் C) நாழி D) தாழி

100. தவறான இணை?

A) தழை – செடி B) தலை – சிரம் C) தழைக்கவும் – வளரவும் D) மனம் – உள்ளம்